தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2021–2022)

(பதினாறாவது பேரவை)

மூன்றாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 6–5–2022)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2021–2022)

(பதினாறாவது பேரவை)

மூன்றாவது அறிக்கை

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

பொருளடக்கம்

பக்கம்

1. 2021–2022 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு .. iii

2. முகவுரை .. v

இணைப்பு

1. பொதுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் கீழ்க்கண்ட ஆண்டறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை:-

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம் ..	1999–2000 முதல் 2014–2015 வரை	..	1-6

2. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் கீழ்க்கண்ட ஆண்டறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை:-

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ..	2013–2014 முதல் 2017–2018 வரை	..	7-9

3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ்க்கண்ட ஆண்டறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை:-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் ..	2015–2016 முதல் 2018–2019 வரை	..	10-12

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2021–2022)

(பதினாறாவது பேரவை)

(2021 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24 ஆம் நாள் அமைக்கப்பெற்றது)

1. ***தலைவர்***

   திரு. நா. இராமகிருஷ்ணன்

உறுப்பினர்கள்

2. திரு. மு. அப்துல் வஹாப்
3. திருமதி V. அமலு
4. திரு. செ. கிருஷ்ணமுரளி
5. திரு. துரை. சந்திரசேகர்
6. திரு. நா. புகழேந்தி
7. திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம்
8. திரு. கே. பொன்னுசாமி
9. திரு. அ. நல்லதம்பி
10. திருமதி எஸ். தேன்மொழி
11. திரு. த. வேலு

செயலகம்

முனைவர் கி. சீனிவாசன்	. . .	செயலாளர்
திரு. ந. இரவிசந்திரன்	. . .	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. தே. நாகராஜன்	. . .	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி சு.சீ. அலமேலு	. . .	தலைமை நிருபர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2021–2022)

(பதினாறாவது பேரவை)

மூன்றாவது அறிக்கை

முகவுரை

2021–2022 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக **மூன்றாவது அறிக்கை**யை பேரவைக்கு அளிக்கிறேன்.

2021–2022–ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு **24–06–2021** அன்று அமைக்கப்பெற்றது.

குழுக் கூட்டம்

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் ஆண்டறிக்கைகள், ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பெற்றது குறித்து **06–04–2022** அன்று **சென்னையில் நடைபெற்ற குழுக்கூட்டத்தில்** சம்பந்தப்பட்ட துறையைச் சார்ந்த உயர் அலுவலர்கள் விளக்கம் அளித்தனர். குழுமுன் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரைகள் மற்றும் பரிந்துரைகள் இவ்வறிக்கையின் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளன.

05–05–2022 ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை–600 009,
05–05–2022
சுபகிருது – **சித்திரை – 22**
திருவள்ளுவர் ஆண்டு–2053

நா. இராமகிருஷ்ணன்
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

இணைப்பு

இணைப்பு

1. பொதுத் துறை

கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம்	1999–2000	31–03–2001	06–05–2008	7 வருடங்கள் 1 மாதம் 6 நாட்கள்
	2000–2001	31–03–2002	19–06–2009	7 வருடங்கள் 2 மாதங்கள் 19 நாட்கள்
	2001–2002	31–03–2003	19–06–2009	6 வருடங்கள் 2 மாதங்கள் 19 நாட்கள்
	2002–2003	31–03–2004	19–06–2009	5 வருடங்கள் 2 மாதங்கள் 19 நாட்கள்
	2003–2004	31–03–2005	11–01–2010	4 வருடங்கள் 9 மாதங்கள் 11 நாட்கள்
	2004–2005	31–03–2006	11–01–2010	3 வருடங்கள் 9 மாதங்கள் 11 நாட்கள்

(1)	(2)	(3)	(4)	(5)
	2005–2006	31–03–2007	11–01–2010	2 வருடங்கள் 9 மாதம் 11 நாட்கள்
	2006–2007	31–03–2008	11–05–2010	2 வருடங்கள் 1 மாதம் 11 நாட்கள்
	2007–2008	31–03–2009	12–11–2010	1 வருடம் 7 மாதங்கள் 12 நாட்கள்
	2008–2009	31–03–2010	10–05–2013	3 வருடங்கள் 1 மாதம் 9 நாட்கள்
	2009–2010	31–03–2011	01–02–2017	5 வருடங்கள் 10 மாதங்கள்
	2010–2011	31–03–2012	08–06–2018	6 வருடங்கள் 2 மாதங்கள் 7 நாட்கள்
	2011–2012	31–03–2013	20–07–2020	6 வருடங்கள் 3 மாதங்கள் 19 நாட்கள்

(1)	(2)	(3)	(4)	(5)
	2012–2013	31–03–2014	20–07–2019	5 வருடங்கள் 3 மாதம் 19 நாட்கள்
	2013–2014	31–03–2015	20–07–2019	4 வருடங்கள் 3 மாதங்கள் 19 நாட்கள்
	2014–2015	31–03–2016	09–01–2020	3 வருடங்கள் 9 மாதங்கள் 8 நாட்கள்

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

துறையின் பதில்
(6)

பொதுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கைகள், அரசிடமிருந்து உரிய அரசாணையைப் பெற்று ஆங்கிலத்திலுள்ள அறிக்கைகளை தமிழில் மொழிபெயர்ப்பு செய்து அதனடிப்படையில் உரிய வடிவத்தில் அச்சடித்து பொதுத் துறைக்கு அனுப்பி தொகுக்கப்பெற்ற பின்னரே ஆண்டறிக்கைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

மாநில மனித உரிமை கழகத்தின் பரிந்துரைகளை பல்வேறு துறைகளுக்கு அனுப்பி அவர்கள் மூலம் பெறும் பதில் தொகுக்கப்பெற்று கொடுக்கப்படும் பரிந்துரைகளுக்கு ஒப்புதல் வாங்கி சரிபார்த்து பணிகளை செய்ய வேண்டியுள்ளதால் காலதாமதம் ஆகியுள்ளது.

2015–2016, 2016–2017, 2017–2018 ஆகிய ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளின் மொழிபெயர்ப்புப் பணிகள் முடிக்கப்பட்டு தகுந்த வடிவத்தில் தயாரிக்கப்பட்டு சட்டமன்றப் பேரவையில் வைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 2018–2019 ஆம் ஆண்டுக்கான அறிக்கைக்கான அனைத்து பணிகளும் முடிக்கப்பெற்று தயார் நிலையில் உள்ளன. இன்னும் 3 மாதங்களில் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். அதற்கடுத்த 2 ஆண்டுகளுக்கான பணிகளில்தான் தேக்கம் ஏற்பட்டுள்ளது.

2018–2019 ஆம் ஆண்டிற்கான அறிக்கைக்கான மொழிபெயர்ப்பு செய்வதற்கு காலம் தேவைப்படும் என்ற நிலை உள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான அறிக்கைக்கு ஆணையத்தின் பரிந்துரை கொடுக்கப்படாத நிலையில் உள்ளது. இவ்விரு ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் தயாரிக்கும் பணிகள் விரைவில் முடிந்துவிடும்.

குழுவின் பரிந்துரை
(7)

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கைகள் சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிப்பது 1999–2000 ஆம் ஆண்டு முதல் காலதாமதமாக இருந்துவந்துள்ளது. வருடக்கணக்கில் இருந்து வந்த காலதாமதம் படிப்படியாக குறைக்கப்பட்டுள்ளது. மீண்டும் 2008–2009 முதல் அதிகமாகி 2014–2015 வரை தாமதம் நீடித்து வந்துள்ளது. அனைத்து துறைகளின் ஒப்புதலோடு அறிக்கை வைக்க வேண்டும், இதனால்தான் மிகுந்த காலதாமதம் ஏற்பட்டது என்று துறை தெரிவிக்கிறது. காலதாமதத்திற்கான துறை கூறும் காரணங்கள் ஏற்புடையதாக இல்லை.

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கைகள் பேரவையில் வைக்கப்படாதது குறித்து இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் (தணிக்கை–1) அலுவலகத்திலிருந்து மிகுந்த அறிவுறுத்தலுடன் கடிதம் வரப்பெற்ற பின்னும் துறை எவ்வித துரித நடவடிக்கையும் எடுக்காதது குழுவிற்கு வருத்தம் அளிக்கிறது. அத்துடன் மேற்படி இந்திய தணிக்கைத் துறைத் தலைவர் (தணிக்கை–1) அவர்கள் துறைக்கும், ஆணையத்திற்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் நகல் சட்டப்பேரவைச் செயலகத்திற்கும், குழுவிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதை குழு இங்கே குறிப்பிடுகிறது. ஆணையத்தின் செயல்பாடுகள் இன்னும் செம்மையாக இருந்திருக்கலாம். இனிவருங்காலங்களில் காலதாமதம் ஏற்படாதவாறு ஆணையத்தின் செயல்பாடுகள் இருக்க வேண்டுமென குழு அறிவுறுத்துகிறது.

நிறுவனத்தின் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிப்பதில் வருடக் கணக்கில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதை குழு ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை.

மேலும், 2020–2021 ஆம் ஆண்டுக்கான பணிகள் துரிதப்படுத்தப்பட்டு ஆணையத்திடமிருந்து பரிந்துரை பெறப்பட்டு ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதற்கு இன்னும் கூடுதலாக கால அவகாசம் தேவைப்படுகிறது.

அறிக்கைகள் ஆங்கிலத்தில் உள்ளதால், தமிழில் மொழிபெயர்ப்பு செய்துதான் அச்சிட்டு பெற வேண்டியுள்ளது. அத்துடன் மொழிபெயர்ப்பு செய்ய வெளியே கொடுத்து வாங்க இயலாது. தமிழ் வளர்ச்சித் துறையில் மொழிபெயர்ப்பு செய்வதற்கென ஒரு தனிப் பிரிவு உள்ளது. அப்பிரிவினை கவனிக்கும் உயர் அதிகாரியுடன் தனியாக தொடர்புகொண்டு விரைவில் மொழிபெயர்ப்பு செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அச்சகத்தில் தற்போது நடைபெற்றுவரும் வரவு செலவுக் கூட்டத்தொடருக்கான பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால், ஆண்டறிக்கைகளை அச்சடித்துப் பெறுவதற்கு காத்திருக்க வேண்டியிருக்கிறது. ஆண்டறிக்கை காலதாமதத்திற்கான முக்கிய காரணமாக அச்சகத்தில் தாமதமாவதை மட்டுமே துறை குறிப்பிடவில்லை.

காலதாமதத்திற்கு துறைதான் பொறுப்பு. அத்துடன் துறையின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு துறை சார்ந்த மற்ற பணிகளும் இருக்கின்றன. இருப்பினும் ஆண்டறிக்கைகள் பேரவையில் உரிய காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டியது துறையின் கடமைதான். ஆனால் துறையிலுள்ள 80 பணியாளர்களை கொண்டு காலதாமதம் இல்லாமல் பேரவையில் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

ஆணையத்தின் பணிகள் யாவும் குடிமையியல் நீதிமன்ற முறையில் செயல்படுவதால், இருதரப்பினரையும் அழைத்து விசாரணை நடத்தி முடிவு செய்யப்படுகிறது. இதனாலேயே காலதாமதம் ஏற்படுகிறது.

காலதாமதம் ஏற்படாமல் இருக்க ஏதாவது ஒரு புதிய வழிமுறையை முயற்சி செய்து உரிய நேரத்தில் அறிக்கையை சமர்ப்பிக்க துறை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். ஓராண்டிற்கான ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதற்கான பணிகளின் நடைமுறைகளை 3 மாதத்திற்கு ஒருமுறை பணி முடிப்பு சரிபார்ப்பு முறையைப் பின்பற்றி பணிகளை முடித்துக்கொண்டு வந்தால், ஆண்டறிக்கையை உரிய காலக்கெடுவிற்குள் தாமதமின்றி அளிப்பதற்கு எளிதாக இருக்குமெனக் குழு கருதுகிறது.

ஒவ்வொரு மாதமும் பணி முடிப்பு சரிபார்ப்பு முறையை மேற்கொண்டு பணிகளை உரிய காலத்தில் முடித்து ஆண்டறிக்கையை தாமதமின்றி சமர்ப்பிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு கருதுகிறது.

நடவடிக்கை எடுக்க முடியாத சில பரிந்துரைகள்மீது, "action proposed to be taken on the recommendations" என்ற முறையில் துறையே நிலுவையிலுள்ள பரிந்துரைகள்மீது நடவடிக்கை எடுக்கலாம். அதற்கான வழிமுறைகள் துறையின் சட்டத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆணையத்தின் மொத்தப் பரிந்துரைகளில், முடிக்க முடியாத சில இனங்கள் குறித்து சட்டத் துறையைக் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கலாம். முடிக்கவே முடியாத சில இனங்களை அரசின் பரிந்துரையினைப் பெற்று முடிவு காணலாம். இனி இதுபோன்ற காலதாமதங்கள் நிகழாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அதுபோல் காலதாமதத்திற்கான விளக்கங்களை அளிக்கும் வகையில் சமம்பந்தப்பட்ட துறை அமைச்சரின் சான்றொப்பம், தாமதத்திற்கான விவர அறிக்கை மற்றும் அரசின் ஆய்வுக் குறிப்புகள் ஆகியவற்றை இனிவரும் காலங்களில் ஆண்டறிக்கைகளுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

ஆணையத்திற்கு வருடத்திற்கு 10,000 க்கு மேற்பட்ட மனுக்கள் பெறப்படுகின்றன. அதில் 8000–க்கும் மேற்பட்ட மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு வருகின்றன. சுமார் 2000–க்கும் மேற்பட்ட எப்போதும் நிலுவையில் இருந்து வருகின்றன. அவ்வாறு நிலுவையில் உள்ள மனுக்களுக்கு ஆணையத்தின்மூலம் துறைக்கு பரிந்துரை செய்கிறார்கள். துறையானது மாநில மனித உரிமைகள் ஆணையத்திடம் பரிந்துரைகளைப் பெற்றவுடன், மனுக்கள் அந்தந்த சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு, இவற்றை ஏற்றுக்கொள்வதா, நிராகரிப்பதா என்று முடிவு செய்யப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அல்லது சில நேர்வுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து அறிக்கைப் பெறப்படும் சூழ்நிலை இருந்து வருகிறது.

குழுவின் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதை பின்பற்றி இனிவருங்காலங்களில் இதுபோன்ற காலதாமதங்கள் ஏற்படாமல் துறை பார்த்துக்கொள்ளும்.

குழு தெரிவித்துள்ளபடி, இனிவருங்காலங்களில் ஆணையத்தின் செயல்பாடுகள் அனைவரின் பாராட்டைப் பெறுகின்ற வகையில் இருக்கும்.

இன்னும் ஒரு வருட காலத்திற்குள் 2015–2016 முதல் 2020–2021 வரைக்குண்டான ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்க பொதுத் துறையும் தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையமும் சேர்ந்து நடவடிக்கைகளை எடுக்கும்.

இனிவரும் காலங்களில் அமைச்சரின் கையொப்பம், காலதாமதத்திற்கான விளக்கம் மற்றும் ஆய்வுக் குறிப்புகளை ஆண்டறிக்கையுடன் இணைத்து சட்டப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்படும்.

2. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்	2013–2014	31–03–2015	05–07–2018	3 வருடங்கள் 3 மாதம் 4 நாட்கள்
	2014–2015	31–03–2016	05–07–2018	2 வருடங்கள் 3 மாதங்கள் 4 நாட்கள்
	2015–2016	31–03–2017	05–07–2018	1 வருடம் 3 மாதங்கள் 4 நாட்கள்
	2016–2017	31–03–2018	24–03–2020	1 வருடம் 11 மாதங்கள் 23 நாட்கள்
	2017–2018	31–03–2019	24–03–2022	2 வருடங்கள் 11 மாதங்கள் 23 நாட்கள்

துறையின் பதில்
(6)

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மிகச் சிறியதாக இருப்பதால், மிகக் குறைவான பணியாளர்கள் மட்டும் பணிபுரிந்து வருகிறார்கள். கணக்கு அலுவலர் பணியிடம் நீண்ட காலம் நிரப்பப்படாமல் இருந்ததால் கணக்குகளை இறுதி செய்வதிலும் காலதாமதம் ஏற்பட்டது.

அனைத்துக் கணக்குகளும் மத்திய கூட்டுறவு வங்கி மூலமாகத்தான் செய்யப்பட்டு வருகின்றன. மத்திய அரசிடமிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் தொகையை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு அளித்து அவர்களிடமிருந்து கடன் விண்ணப்பங்களைப் பெற்று, அதற்கு ஒப்புதலளித்து 3% வட்டிக்கு கடன் வழங்கப்படுகிறது. கடன் தொகையை மீளப்பெற்றதும், மத்திய அரசுக்கு திருப்பிச் செலுத்தப்படுகிறது. இந்நடைமுறையில் ஏற்பட்டுவரும் காலதாமதத்தால், ஆண்டறிக்கை சமர்ப்பிப்பதிலும் தாமதம் ஏற்பட்டுவிடுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் கணக்கு விவரங்களைப் பெறுவதில் அதிக காலதாமதம் ஆகின்றது. இருந்தாலும், அகில இந்திய அளவில் இக்கழகத்தினால் வழங்கப்படும் கடன்களில் 90 சதவிகிதம் வரை திரும்பச் செலுத்தப்படுகின்றன. அவ்வகையில் கழகத்தின் செயல்பாடுகள் சிறப்பாக இருந்து வருகின்றன.

2018–2019 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் ஓராண்டிற்கான முழு கணக்குகளையும் திருத்தம் மேற்கொள்ளச் சொல்லி தலைமைக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகத்திலிருந்து கணக்குகள் திரும்பப் பெறப்பட்டதாலும், அவற்றை மீண்டும் பொதுக் குழு கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெறுவதிலும் அதிக காலதாமதமானது. தற்போது, துறையின் அலுவலகத்தில் நிறைய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. கணக்குகள் கணினிமயமாக்கல்

குழுவின் பரிந்துரை
(7)

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் 2013–2014 ஆம் ஆண்டறிக்கை காலதாமதமாக சமர்ப்பிக்கப்பட்டதற்கு கணக்குகளை சரிபார்க்க கணக்கு அலுவலர் பணியிடம் நிரப்பப்படாததால், உதவியாளரே கணக்குகளைப் பதிவு செய்தும், மேலாளரே கணக்குகளை சரிபார்த்தும் வந்த காரணத்தால்தான் தாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும் அத்துடன் கணக்கு அலுவலர் பணியிடம் 2019 நவம்பரில் தான் நிரப்பட்டுள்ளது என்றும் தாமதத்திற்கு துறை தெரிவிக்கும் காரணத்தை குழுவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

2013–2014, 2014–2015, 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018 ஆம் ஆண்டறிக்கைகளை பேரவையில் சமர்ப்பிப்பதில் ஏற்பட்டதற்கான காலதாமதங்கள் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கின்றன. 2018–2019 ஆம் ஆண்டு கணக்கிற்கு கணக்காய்வுத் தலைவரின் இறுதி கருத்துரை பெறுவதற்கு 1¼ ஆண்டுகளுக்கு மேலாக தாமதமாகியுள்ளது. 3 மாதங்களுக்கொருமுறை கூர்ந்தாய்வு செய்து அவ்வப்போது பணிகளை முடித்திருந்தால் காலதாமதங்களைத் தவிர்த்திருக்கலாம்.

துறை அளித்துள்ள உறுதிமொழியின்படி 2019–2020 மற்றும் 2020–2021 ஆகிய 2 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை உரிய காலத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென துறைக்கு குழு அறிவுறுத்துகிறது.

ஒவ்வொரு ஆண்டறிக்கையிலும் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களின் கையெழுத்துடன் காலதாமதத்திற்கான விளக்கக் குறிப்புரை இடம்பெற்றிருக்க வேண்டும். ஆனால் 2013–2014, 2014–2015, 2015–2016 ஆகிய 3 ஆண்டறிக்கைகளில் விளக்கக் குறிப்புரை இடம்பெறவில்லை. இனி வரும் காலங்களில் கண்டிப்பாக இடம்பெற்றிருக்க வேண்டும்.

செய்யப்பட்டு வருகின்றன. குழு சுட்டிக்காட்டியுள்ள பரிந்துரைகளை துறை முழுமையாக ஏற்றுக்கொள்கிறது. இனிவருங்காலங்களில் தாமதங்கள் தவிர்க்கப்படும்.

2018–2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே சமர்ப்பிப்பதற்காக பேரவைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை மாநில கணக்காயருக்கு அனுப்பி அவரின் ஒப்புதலைப் பெற்றபின்பு பொதுக் குழுவின் ஒப்புதல் பெற்று ஜூன் 2022 மாதத்திலும், 2020–2021 ஆம் ஆண்டிற்கான அறிக்கையை செப்டம்பர் 2022–லும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குழு அறிவுறுத்தியுள்ளவாறு, இனி சமர்ப்பிக்கப்பெறும் ஆண்டறிக்கைகளில் சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கையொப்பத்துடன் கூடிய விளக்கக் குறிப்புரை இடம்பெறவும், கணக்கு அறிக்கைகள் சமர்ப்பித்த தேதிகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பெயர்களில் தவறுகள் நேரா வண்ணம் உரிய காலத்தில் ஆண்டறிக்கைகளை பேரவையில் சமர்ப்பிக்க துறை உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளும்.

மேலும், ஆண்டறிக்கைகளில் தணிக்கை அறிக்கைகள் சமர்ப்பித்த தேதிகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களது பெயர்கள் ஆகியவற்றை ஆங்கிலத்திலும், தமிழிலும் மிகச் சரியாக குறிப்பிட வேண்டும். குழு சுட்டிக்காட்டியுள்ள தவறுகள் மீண்டும் நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

TRUTH ALONE TRIUMPHS

3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்	2015–2016	31–03–2017	05–01–2019	1 வருடம் 9 மாதம் 4 நாட்கள்
	2016–2017	31–03–2018	22–03–2022	3 வருடங்கள் 11 மாதங்கள் 21 நாட்கள்
	2017–2018	31–03–2019	22–03–2022	2 வருடங்கள் 11 மாதங்கள் 21 நாட்கள்
	2018–2019	31–03–2020	22–03–2022	1 வருடம் 11 மாதங்கள் 21 நாட்கள்

துறையின் பதில்
(6)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் 2015–2016 முதல் 2018–2019 வரையிலான ஆண்டறிக்கைகளை பேரவையில் காலதாமதமாக சமர்ப்பித்தமைக்கு துறை வருத்தத்தினைத் தெரிவித்துக்கொள்கிறது. ஆண்டறிக்கைகள் கழகத்திடமிருந்து அரசுக்கு வருவது காலதாமதமாகவே இருந்து வந்துள்ளது. இனிவரும் காலங்களில் இதுபோன்ற காலதாமதம் ஏற்படாதவாறு துறை நடவடிக்கை மேற்கொள்ளும்.

2018–2019 ஆம் ஆண்டினைப் பொறுத்தவரையில் 28–4–2021 அன்று கணக்குகளை இறுதி செய்து தணிக்கைத் துறைக்கு அனுப்பினோம். 2019–2020 ஆம் ஆண்டுக் கணக்குகளெல்லாம் மாநில கணக்காயர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அவருடைய ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது.

2020–2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் தயார் செய்யும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவையனைத்தையும் ஆகஸ்ட் 2022 மாதத்திற்குள் முடிப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுவாக, மாநில தணிக்கை அலுவலகத்திலிருந்து சான்றளிக்கப்பட்ட தணிக்கை அறிக்கை பெறுவதற்கு 3 மாதம் காலமாகி விடுகிறது. கோவிட் பெருந்தொற்றாலும் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிப்பதில் காலதாமதமாகிவிட்டது. ஆண்டறிக்கைகளை ஒவ்வோராண்டும் சமர்ப்பிக்கும் பணியானது ஒரு நீண்ட வழிமுறையாக இருப்பதால், குழு அறிவுறுத்தியவாறு, உரிய கால அவகாசத்திற்குள் சமர்ப்பிக்க விரைவான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இனிவரும் காலங்களில் இதுபோன்று காலதாமதம் ஏற்படாது.

குழுவின் பரிந்துரை
(7)

2015–2016 முதல் 2018–2019 வரையுள்ள ஆண்டுக் கணக்குகள் தாமதமாக வைக்கப்பட்டதற்கான காரணங்கள் குழுவினால் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாகத்தான் இருக்கின்றன.

கோவிட் பெருந்தொற்றால் ஆண்டறிக்கைகள் வைப்பதற்கு காலதாமதம் ஆகிவிட்டது என்று துறை கூறும் காரணத்தை குழு ஏற்றுக் கொள்கிறது.

2019–2020 மற்றும் 2020–2021 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் இந்த நிதியாண்டு இறுதிக்குள் பேரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று துறை குழுவிற்கு உறுதியளித்துள்ளவாறு ஆண்டறிக்கைகளை சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2019–2020 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை 30–9–2022–க்குள் சமர்ப்பிக்கப்பட்டுவிடும்.

மேலும், 2020–2021 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை தயாரிக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாண்டறிக்கைக்கான கணக்கு விவரங்கள் மாவட்டங்களிலிருந்து பெறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதற்கு சற்று கால அவகாசம் தேவைப்படுவதோடு மார்ச் 2023–ல் சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 2020–2021 மற்றும் 2021–2022 ஆகிய 2 வருடங்களுக்கான ஆண்டறிக்கைகளை விரைவில் பேரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுவிடும்.

முனைவர் கி. சீனிவாசன்
செயலாளர்.